செய்தி வெளியீடு எண்: 55 நாள்: 12.09.2026

# மக்கள் மாளிகை, தமிழ்நாடு

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், தமிழ்நாடு ஆளுநர்அவர்களின் பத்திரிக்கை செய்தி

"டெல்லியில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாடு 2026 நிகழ்வின் போது, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், காலத்தால் அழியாத திருக்குறளின் ரஷ்ய மொழிபெயர்ப்பு நூலை, ரஷ்யக் கூட்டமைப்பின் அதிபர் மேதகு திரு. விளாடிமிர் புதின் அவர்களுக்கு வழங்கியது, தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமைமிகு தருணமாகும்.

போற்றுதலுக்குரிய திருவள்ளுவர் பெருந்தகையால் இயற்றப்பட்ட திருக்குறள், அறம், நீதி, நல்லாட்சி, இரக்கம் மற்றும் மனிதநேயம் போன்ற உலகளாவிய விழுமியங்களை எடுத்துரைக்கும் ஒப்பற்ற படைப்பாகும். அதன் காலத்தால் அழியாத ஞானம், மொழி, பண்பாடு மற்றும் புவியியல் எல்லைகளைக் கடந்து மனிதகுலம் முழுமைக்கும் வழிகாட்டுகிறது.

திருவள்ளுவரின் பெருமையையும், தமிழின் செழுமையான இலக்கியப் பாரம்பரியத்தையும் உலக அரங்கில் சிறப்பாக எடுத்துரைத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். இந்தச் சிறப்புமிக்க பண்பாட்டு நல்லுறவுச் செயல்பாடு, தமிழ் நாகரிகத்தின் தொன்மையையும், மனிதகுலத்திற்கு அது வழங்கியுள்ள உலகளாவிய பங்களிப்பின் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

திருவள்ளுவரின் ஞானம் தமிழில் வேரூன்றியது; இந்தியாவால் போற்றப்படுகிறது; மனிதகுலம் முழுமைக்கும் உரியது."

.................................................................................................................................................

மக்கள் மாளிகை, சென்னை-22 வெளியீடு-
நாள்: 12.09.2026 மக்கள் தொடர்பு அலுவலகம்